1983 பிப்ரவரி 12]

கொடுக்கின்ற சம்பளம் மிகக் குறைவானது என்பதை கணக்கிலெடுத்து நியாயமான குறைந்தபட்ச சம்பளச் சட்டம் கொண்டுவந்து அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? அதோடு அங்கே ஏராளமான தும்பு கிடைக்கின்ற காரணத்தால் அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, குளைச்சலிலே பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு நியாயமான சம்பளங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அங்கே நல்ல தும்பு கிடைக்கின்ற காரணத்தால் அதை அதிகப் பட்சமாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை வாரியம் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கள் இறக்குவதிலே இன்றையதினம் அதிக கவனம் செலுத்துகிற காரணத்தால் பனைமரத்திலிருந்து பதநீரை இறக்குவது குறைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ? இந்தப் பதநீர் மட்டுமல்ல, நுங்கு மட்டுமல்ல, பனை உற்பத்திப் பொருள்களான, பனைவெல்ல உற்பத்தியும் குறைவாக இருக்கிறது என்பது தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வெளிநாட்டுக்கு எது எது அனுப்பப்படுவது பற்றியதாகும். கள்ளும், பதநீரும் நம் நாட்டிலேயே உபயோகப்படுவது.

பொதுப் பணித்துறையில் பணியாற்றும் பொறியாளர்கள்.

*வினா எண். 258—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுக் பணித் துறையைச் சேர்ந்த இஞ்சீனியர்களை வெளிநாடுகளுக்கு (deputation) அடிப்படையில் அனுப்புவதில்லை என அரசு முடிவெடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) மற்றும் (ஆ): அயல் நாட்டுப் பணிப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள மாநில அரசால் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட பொறியாளர்களையும், இப்பணிக்கு ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியாளர்களையும், மத்திய அரசு அழைப்பு அனுப்பும் நேரத்தில் விடுவிக்க அனுமதி வழங்கலாம் என்றும், இனிவரும் விண்ணப்பங்களைப்

[1983 பிப்ரவரி 12

பொறுத்தவரையில் தகுதிக்கேற்ப ஆய்வு செய்து, அவர்களை அயல் நாட்டுப் பணிக்கு அனுப்பினால் நம் துறையின் பணி பாதிக்கப்படுமா என்பதைக் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கலாம் எனவும் அரசு தீர்மானித்துள்ளது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது வெளி நாடுகளுக்கு இனிமேல் செல்லுகின்ற பொறியாளர்களை அனுப்பும்போது அது இங்குள்ள நாட்டுப் பணியைப் பாதிக்குமா என்று ஆய்வு செய்து அனுப்பவேண்டுமென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி வெளிநாட்டுக்கு அனுப்புவதால், நூற்றுக்கணக்கான இன்ஜினியரிங் கிராஜுவேட்ஸ்களுக்கு படித்து விட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைக்குமே? ஏன் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே படித்த பட்டதாரிகள் பொறியாளர்களை—ஜுனியர் இன்ஜினியர், கீழ் மட்டத்தில் இருப்பவர்கள்—இங்கே பணியாற்றுவதற்கு வருகை தராமல் இருப்பதன் காரணமாகவும் இங்கே ஜுனியர் இன்ஜினியர்ஸ்களில் பட்டம் பெற்றவர்கள் குறைவாக இருக்கிற காரணத்தாலும் அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது பற்றி இந்த அரசு இப்படிப்பட்ட முடிவு எடுத்திருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் பணியாற்றியபிறகு அவர்களுக்கு ஒரு எக்ஸ்பீரியன்ஸ் கிடைத்ததற்குப் பிறகுதான் அவர்கள் வெளி நாடுகளுக்குச் செல்கிறார்கள். அங்கே போய் தங்கியும் விடுகிறார்கள். லீவ் போட்டுவிட்டு டிசர்ட் ஆகிவிடுகிறார்கள். பல ஆண்டுக்காலம் லீவிலே இருக்கிறோம், இருக்கிறோம் என்று வெளிநாடுகளில் குறிப்பாக, அரபு நாடுகளிலே நம்முடைய பொறியாளர்கள் இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டியது அவசியமான காரியம் தான். என்றாலும் அப்படிச் செல்லக்கூடியவர்கள் தங்களுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டுப் போகவேண்டுமென்று விரும்பினால், அதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கலாமே. அப்படி நிரந்தரமாக ஏன் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும்?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாகப் பொறியாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது அரசின் கொள்கையல்ல. ஓராண்டுக் காலத்திற்கு மட்டும் முதலில் அனுப்புகிறோம். பின்னர் ஓராண்டு, ஓராண்டாக நீடித்து, அதிகபட்சம் ஐந்து ஆண்டுக் காலம் வெளிநாடுகளில் பணியாற்ற அனுமதிக்கிறோம். அந்த

1983 பிப்ரவரி 12]

ஐந்து ஆண்டுக் காலத்திற்கு மேல் அவர்கள் அங்கே பணியாற்ற முடியாது. நிரந்தரமாகவும் இருக்க முடியாது. அப்படி இருப்பவர்களை மீண்டும் நாம் தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

திரு. மி. வின்செண்ட் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருந்து டெபுடேஷன் அடிப்படையில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பொறியாளர்களின்—பொறியியல் வல்லுநர்களின்—எண்ணிக்கை என்ன? அவர்கள் பல ஆண்டுக் காலமாக வெளிநாடுகளில் நிரந்தரமாகத் தங்கி, அந்த வெளிநாடுகளுக்குப் பெருமை சேர்க்கும் திறமைபெற்ற நிபுணர்களை நமது நாட்டிற்கு அழைத்து வர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் கண்காணிப்புப் பொறியாளர்கள் (சூப்பிரண்டெண்டெண்டிங் இன்ஜினீயர்) 57 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 1 நபர் மட்டும் வெளிநாடுகளில்—அயல் பணிக்கு—அனுப்பப்பட்டு இருக்கிறார். எக்சிகியூடிவ் இன்ஜினியர்கள் 315 பேரில் 7 பேர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பெற்று இருக்கிறார்கள். உதவி செயற்பொறியாளர்கள் (அசிஸ்டெண்ட் எக்சிகியூடிவ் இன்ஜினீயர்கள்) 1,318 பேரில் 29 பேர்கள் அயல் பணிக்குச் சென்றிருக்கின்றனர். உதவிப்பொறியாளர்கள் (அசிஸ்டெண்ட் இன்ஜீனியர்)3283 பேரில் 8 பேர்கள் அயல்பணிக்குச் சென்று இருக்கிறார்கள். மொத்தம் உள்ள 4973 பேர்களில் 45 பேர்தான் இப்போது அயல்நாட்டில் பணிசெய்கின்றனர் என்ற விவரம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அத்தகைய பொறியாளர்களை நம் நாட்டிலேயே பணியில் அமர்த்திக் கொள்ள இந்த அரசு அக்கறை காட்டுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனாதை விடுதிகள் பராமரிப்பிற்கான நிதி உதவி.

*வினா எண். 259—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனாதை விடுதிகள் பராமரிப்பிற்கு என்று வெளிநாடுகளிலிருந்து உதவிகளை சிலர் பெறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உதவிகள் பெறுவது யார், யார் என்பதை அரசு அறிவிக்குமா?

TRUTH ALONE TRIUMPHS